மஹா சிவராத்திரியன்று நான்கு காலமும் அபிஷேக பூஜைகளும் கார்த்திகை சோமவார அபிஷேக உற்சவங்களும் திருவெம்பாவைக் கால மஹோற்சவமும் சிறப்புடையன. சாரதா நவராத்திரி காலத்தில் நடைபெறும் தச சண்டீ ஹோமமும் விசேட அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீ சக்ரபூஜை, நவாவர்ண ஹோமம், லட்சார்ச்சனை என்பனவும் தனிச் சிறப்புடையன.

ஐப்பசி மாத இறுதி வெள்ளிக்கிழமையில் இயம சம்ஹார உற்சவம் இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு நடைபெறுகின்றது. அதுபோல இவ் ஆலய மஹோற்சவ காலத்தில் அட்டவீரச் செயல்கள் உணர்த்தும் உற்சவங்களும் சிறப்புடையன. இவற்றை இத்தல புராணத்திலும் சிறப்பாக குறிப்பிடப்பட்டிருக்க காணலாம்.

இத்தகைய தனித்துவமான மரபுகளுடைய இவ்வாலயத்தில் இவ்வருடம் 24.12.2017 திருவெம்பாவை ஆரம்ப நாளன்று துவஜாரோகணமாகி பதினொரு நாட்கள் மஹோற்சவம் நடைபெற உள்ளது. 02.01.2018 திருவாதிரை நாளன்று அதிகாலை ஆர்த்திரா அபிஷேகமும், தர்சனத்தை தொடர்ந்து ரதோற்சவமும், திருவூடல், ஆர்த்திரா தீர்த்த சங்கிரஹணம் என்பனவும் இடம்பெறவுள்ளன. மறுநாள் 03.01.2018 அன்று பகல் தீர்த்தமும் மாலை த்வஜாவரோஹணமும் நிகழ இருக்கின்றது.

இவ்வுற்சவ காலங்களில் 24.12.2017 அன்று மாலை சிறப்பாக விக்னேஸ்வரனுக்ரஹ தர்சனமும் 25.12.2017 அன்று சந்திரசேகர பட்டமும், 26.12.2017 அன்று பிரம்ம சிரச்சேத உற்சவமும் 27.12.2017 அன்று சிவபக்த உற்சவமும் 28.12.2017 அன்று ம்ருத்யுஞ்ஜய உற்சவமும் 29.12.2017 அன்று பிக்ஷாடன உற்சவமும் 30.12.2017 அன்று கைலாச வாகன உற்சவமும் 31.12.2017 அன்று ம்ருகயாத்ரா உற்சவமும் 01.01.2018 அன்று சப்பர உற்சவமும், 02.01.2018 அன்று நடராஜ மூர்த்தியின் ஆனந்த நடன தர்சனமும் 03.01.2018 அன்று சண்டேசானுக்ரஹ தர்சனமும் 04.01.2018 அன்று திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும்.

மார்கழித் திருவெம்பாவையின் பத்துத்தினங்களையும் உற்சவமாக கொண்ட மரபில் ஆறாம் நாட்காலை பிட்டுக்கு மண் சுமந்த உற்சவமும் இந்நாட்களில் தினமும் திருவாசக முற்றோதலும் நிகழ இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமியின் மஹோற்சவ காலத்தில் பஞ்ச கிருத்தியங்களையும் உணர்த்தும் உற்சவச் சிறப்பினை அனைவரும் தரிசித்து இகபர சுகங்களை பெற்றுய்வீர்களாக.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

*திருவளரிலங்கை யோங்கித்*
*திகழும் யாழ்ப்பாண நல்லூர்க்*
*கரு வளந் தோங்கத் தேங்குங்*
*கல்வள வாலயத்தி*
*லுருவளர் கார்த்திகேய யோகி*
*உத்தம தியானப்*
*பொருள் கைலாயநாத*
*பூரணர்க் கன்பு செய்வாம்.*

–[கைலாசநாதபுராணம் – ஸ்தலபுராணம்]

### திருக்குடவாயில் கூத்தன் [மயிலணி சிவன் கோயில்]

நடராஜப் பெருமானே மூலஸ்தானத்தில் (கருவறையில்) காட்சி தரும் அழகான ஆலயம் சுண்ணாகம் மயிலணி விசாலாட்சியம்பிகா சமேத விஸ்வநாதசுவாமி கோயிலாகும். முருகப்பெருமானால் பூசிக்கப்பட்டதான ஐதீக கதையுடைய தொடர்புடைய இத்தலம் மயிலணியில் வாழ்ந்த கௌண்டிந்ய குல திலகரான பிரம்மஸ்ரீ. கார்த்திகேய குருக்களால் மேற்றிசை நோக்கி தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.



வில்வமரத்தை தல விருட்சமாகவும் சிவ கங்கையை தீர்த்தமாகவும் கொண்ட இத்தலம் திருக்குடவாயில் என்றும் அழைக்கப்படுவதுடன் இத்தல மூலஸ்தான ஸ்தூபி நடராஜப்பெருமானுக்குரிய கனகசபை ஸ்தூபி போன்றே உருவாக்கப்பட்டுள்ளது. வைகாசி மாதத்தில் மஹோற்சவமும் ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை யமசங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும் இத்தலத்தில் இந்த ஆண்டு 01.01.2018 (ஆங்கில புத்தாண்டன்று) திருவெம்பாவை 9ஆம் நாளில் வழமை போல ஆனந்த நடராஜருக்கு மஹாரத உற்சவம் நடைபெறவுள்ளது.

பிரதோஷ காலத்தில் நந்திதேவரின் கொம்புகளின் நடுவே நடேசப் பெருமானை இங்கு தரிசிக்க முடிவது தனித்து வமானது. நாமும் குடவாயில் கூத்தனை கொண்டாடுவோம்.